**தலைப்பு 1 – சனாதிபதி அலுவலகம்**

----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சனாதிபதி அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்றுக்கள், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சனாதிபதி அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.3(அ) பந்தியில் உள்ளடக்கப்பட்ட கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்பிற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சனாதிபதி அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடவேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 341,094 ஆன கடன் மீதி 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டிலும், 2018 ஆம் ஆண்டிலும் வேலை நீக்கம் செய்யப்பட்ட மூன்று உத்தியோகத்தர் களிடமிருந்து 2021 ஏப்ரல் 27 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 363,017 ஆகும். | கடன் மீதி பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சனாதிபதி அலுவலகத்தில் சேவையாற்றி 2015, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது சேவையை விட்டுச்சென்ற 12 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமாக ரூபா 974,813 ஆன கடன் மீதி 2021 ஏப்ரல் 27 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதி தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடம் கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கும், பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிலுவைக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 454(1) இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்குரிய சனாதிபதி ஊடக விசேட பிரிவு, புதிய ஊடக பிரிவு மற்றும் இணையத்தள நிர்வாகப் பிரிவு என்ற 03 பிரிவுகளுக்காக பொருட் பதிவேட்டு புத்தகம் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் ஊடகப் பிரிவில் தனித்தனியாக பொருட் பதிவேட்டு புத்தகத்தை பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | கோட்டை சனாதிபதி மாளிகையின் களஞ்சியத்திலும், நூலகத்திலும் வைக்கப்பட்டிருந்த பல்வேறு நாடுகளிலிருந்து சனாதிபதிக்கு கிடைக்கப் பெற்றிருந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுகள் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வுச் சபையினால் நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுகளுக்காக பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | முறையான பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | | |
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரையின் 149(1) ஆம் உறுப்புரை | 295,266,140 | 2019 ஆம் ஆண்டின் இறுதிவரை சனாதிபதி அலுவலகத்தின் கீழ் அமுல்படுத்த ப்பட்ட தாமரைக் கோபுர அரங்கின் வருமானம் தொடர்பாக அரசியலமைப்பு உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் ஆரம்பம் முதல் இதுவரை அந்த வருமானம் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு அதன் மூலம் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது | தாமரைக் கோபுர அரங்கிற்காக பொது திறைசேரியிலிருந்து நிதியேற்பாடு வழங்கப்பட்டிருக்க வில்லை. அதனால் தாமரைக் கோபுர அரங்கின் பணம் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு அதற்காக ஏற்படுகின்ற செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது. அரங்கிற்காக ஏற்படுகின்ற செலவினங்களை செய்வதற்கு பொதுத் திறைசேரியினால் நிதியேற்பாடு ஒதுக்கப் பட்டிருக்குமாயின் அதன் மூலம் கிடைத்த வருமானம் வருமானத் தலைப்பிற்கு செலவு வைப்பதற்கு முடியுமாக இருக்கும். | அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 20 ஆம் இலக்க பெறுமதி சேர் அடிப்படையிலான வரி திருத்த சட்டத்தின் 10(2) ஆம் பிரிவு | - | வரி அறவிட முடியுமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு நபரும் அவர்களின் வரி அறவிடக் கூடிய | தாமரைக் கோபுர அரங்கு தனியான நிறுவனமொன்றாக பதிவு செய்யப்படாதிருந்த மையால் அதற்காக பெறுமதி சேர்வரியின் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்கள் காலாண்டிற்கு ரூபா 3 மில்லியனை விஞ்சுமாயின் அல்லது ஆண்டிற்கு ரூபா 12 மில்லியனை விஞ்சுமாயின் பெறுமதி சேர் வரிக்காக (VAT) பதிவினைப் பெறவேண்டியிருந்த போதிலும் அலுவலகத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட தாமரைக் கோபுர அரங்கு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 08 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் VAT வரி அறவிடப்பட்ட போதிலும் அவ்வாறு பதிவினை பெற்றுக் கொண்டு அந்த பணத்தை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அடிப்படையிலான வரிக்காக பதிவினை பெற்று கொள்வதும் தேவையற்றதாக இருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### 2.1.1 மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 செலவின விடங்களுக்காக ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 118,767,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | ஒரு விடயம் பொது திறைசேரியினால் 2019 மே மாதம் முதல் ‘‘பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அந்தஸ்த்து அல்லாத அமைச்சு’’ ஆக புதிய செலவின விடயமொன்றின் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை மற்றும் ஏனைய செலவின விடயத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ‘‘சிறு வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்’’ இற்காக விவசாய ரீதியான அபிவிருத்திகளுக்காக சர்வதேச நிதியத்திலிருந்து (IFAD) வழங்க வேண்டியிருந்த தொகைக்காக அந்த நிதியத்திலிருந்து அங்கீகாரம் கிடைக்காமையினால் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 33 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த செலவின விடயங்களில் நிதிஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 45 சதவீதம் முதல் 94 | பாதீட்டு மதிப்பீடுகளிலிருந்து கட்டாய சேமிப்புக்கள், கட்டுநிதி போதியளவான பிரகாரம் கிடைக்கப் பெறாமை, 2019.12.10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏனைய நிறுவனங்களின் கீழ் வர்த்தமானியில் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | பிரசுரிக்கப்பட்டமை மற்றும் திறைசேரி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை நிறுத்துவதற்கு ஏற்பட்டமை இதற்கான காரணங்களாக இருந்தன. | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(இ) பந்தியின் பிரகாரம் பொறுப்புக்கள் அந்த ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்தமையால் பொறுப்புக்கள் எதிர்வரும் ஆண்டிற்கு கொண்டு செல்ல முடியாதிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் அட்டவணை இலக்கம் (iii) இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அலுவலகத்தினால் ரூபா 1,093,497,793 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | அலுவலகத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் விடுவிக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் இந்த கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2019.12.31 இல் உள்ளவாறு கட்டுநிதி கிடைக்கப் பெறாமையால் இந்த பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் iii ஆம் இலக்கத்தின் கீழ் உள்ளடக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 94.1 இன் பிரகாரம் நிதியேற்பாட்டின்றி பொறுப்புக்களுக்கு உடன்பட முடியாதிருந்த போதிலும் 04 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பான ரூபா 216,854 கூட்டுத்தொகையான | நிதிப்பிரமாணம் 94/2 இன் கீழ் அர்த்தப்படுத்தப்பட்டுள்ள செலவினங்களாக கருதி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

நிதியேற்பாடு ரூபா 21,075,243 இனால் விஞ்சி ரூபா 21,292,097 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சனாதிபதி அலுவலகத்தின் மூலம் அமுல்படுத்தப் படுகின்ற 05 விசேட செயற்திட்டங்களின் நிதியேற்பாடுகளின் சேமிப்பு 26 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 2019.12.10 ஆந் திகதிய 12/2153 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விசேட செயற்திட்டங்கள் ஏனைய அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சனாதிபதி அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட ஒவ்வொரு செயற்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடு மற்றும் அவற்றின் செயல்முன்னேற்றம் தொடர்பாக தெரிவு அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட நுவரெலியா மாவட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) நுவரெலியா மாவட்டத்தில் மாவட்ட விவசாய பிரிவின் மூலம் அமுல்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 07 செயற்திட்ட | அங்கீகரிக்கப்பட்டுள்ள 04 செயற்திட்டங்களுக்காக நலனாளிகளை தெரிவு செய்தல் மற்றும் பயிற்சியளித்தலுக்காக கவனத்தில் கொள்ளக் கூடிய காலமொன்று ஏற்பட்டிருந்ததுடன் | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்மொழிவுகளில் 04 இனை அமுல்படுத்துவதற்காக சனாதிபதி செயலகத்திலிருந்து ரூபா 21,950,910 தொகையான நிதியேற்பாடு ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு செயற்திட்டம் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய செயற்திட்டங்களுக்காக கிடைத்த நிதியேற்பாட்டு பணம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக 2019 நவம்பர் 20 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் BD/GPS/155/09/01/HA-2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ரூபா 7,124,713 தொகையான நிதியேற்பாடு மீள திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | திறைசேரி செயலாளரின் 2019.11.20 ஆந் திகதிய BD/GPS/155/09/01/HA-2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (ii) | நய் மிளகாய் பயிர்ச்செய்கைக்குரிய அரசாங்கம் மற்றும் 50 சதவீத நலனாளிகள் பங்களிப்பின் கீழ் செயற்திட்டம் கொத்மலை மற்றும் அம்பகமுவ செயற்திட்ட பிரிவுகளில் அமுல்படுத்துவதற்கு ரூபா 2,927,775 தொகையான நிதியேற்பாட்டு நிதி சனாதிபதி செயலகத்திலிருந்து 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதி மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 சனவரி மாதம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த நலனாளிகளை குறிப்பாக இனங்காணல் 2019 ஒக்தோபர் 28 ஆந் திகதி வரை தாமதமடைந்திருந்தது. | நய் மிளகாய் பயிர்ச்செய்கைக்காக பொலி டனல் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக நலனாளிகளை தெரிவு செய்தல் மற்றும் பயிற்சியளிப்பதற்காக கவனத்தில் கொள்ளக்கூடிய காலமொன்று எடுத்திருந்ததுடன் திறைசேரி செயலாளரின் 2019.11.20 ஆந் திகதிய BD/GPS/155/09/01/HA-2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பின்னர் அவர்களின் 50 சதவீத பங்களிப்பை பெற்று செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையாலும், பொலி டனல் நிர்மாணிப்பதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாகவும் இந்த நிதியேற்பாட்டை திருப்பி அனுப்பி செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | மாவட்டத்திற்கு கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 15 செயற்திட்டங்களில் 06 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் கைவிடப்பட்டிருந்தது. செயற்படு நிலையில் காணப்பட்ட கைத்தொழில்களின் இலக்கு மற்றும் பௌதீக நிலைமைகள் பின்வருமாறு இருந்தது. | | |
| (i) | கொத்மலை பிரதேச செயலகப் பிரிவில் பூண்டுலோயா தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாழ்ந்து வருகின்ற ஆடைத் தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருக்கின்ற 35 நலனாளிகளுக்காக ரூபா 1,559,687 செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. கிராம சக்தி விசேட செயற்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் நலனாளிகளுக்கு பெறக் கூடியதாக இருந்த வருமானத்தில் எந்தவொரு பங்களிப்பும் உரிய | இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதுடன் அதற்காக நலனாளிகளின் பங்களிப்பிற்கான தவணைப் பணத்தை அறவிடுவது போதியளவான பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. கொத்மலை பிரதேச செயலகம் இதற்காக நடவடிக்கை எடுத்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தமையால் சங்கத்தின் அபிவிருத்திக்காக எதிர்காலத்தில் ஈடுபடுத்துவதற்கு முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சங்கங்களின் அபிவிருத்திக்காக ஏனைய செயற்திட்டங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் சங்கத்தின் அபிவிருத்திக்காக நலனாளிகளின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் பொறமடுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் சணல் உற்பத்தி மேம்படுத்தலின் மூலம் பிரிவில் வாழ்ந்து வருகின்ற மக்களின் வருமான மட்டத்தை கட்டியெழுப்புவதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் நோக்காகக் கொண்டு செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 2,589,602 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. 2019 மார்ச் 12 ஆந் திகதி ரூபா 120,000 தொகை செலவில் சணல் நார் உற்பத்தி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 ஒக்தோபர் மாதத்திலேயே சணல் கன்றுகள் நடப்பட்டிருந்தன. தற்போது அருகில் உள்ள பிரதேசங்களில் உள்ள சணல் நார் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நபர்களில் அநேகமானோர் இயந்திரம் மூலம் சணல் நார் உற்பத்தி செய்யும் போது மேலதிக | சணல் செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது பாரம்பரிய முறைமையை அகற்றி செயற்திட்டத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இயந்திரத்தை ஈடுபடுத்துவதனால் ஏதாவது பின்னடைவு ஏற்பட்டபோதிலும் இதுவரையிலும் 45 தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்கள் உருவாகி இருந்தமையும் அறிக்கையிடப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினமொன்றை செலுத்துவதற்கு ஏற்பட்டமையினால் பாரம்பரிய முறையில் உற்பத்தி 2019 மார்ச் முதல் திசெம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட மையால் இயந்திரத்தின் மூலம் ரூபா 2,505 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நிரந்தரமாக வறுமையை பூரணமாக ஒழிக்கும் நிலைபேறான அபிவிருத்தி நோக்காகக் கொண்டு கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம சக்தி மக்கள் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நுவரெலியா மாவட்டத்தில் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் முதல் கட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 15 சங்கங்களும், அதில் இரண்டாவது கட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் 45 சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. | | |
| (i) | கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சியின் நோக்கம், கொள்கை, இலக்குகள் மற்றும் தத்துவங்களை கவனத்தில் கொள்ளும் போது பிரிவுகளில் அநேகமானோருக்கு நலன்கள் கிடைக்கும் வகையில் அமுல்படுத்துவதற்காக பிரிவின் மொத்த மக்களின் அநேகமானோர் கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியின் அங்கத்துவத்தை கொண்டிருக்க வேண்டிய போதிலும் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் | கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியின் நோக்கமாக பிரிவுகளில் அநேகமான தரப்பினருக்கு நலன்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் பிரயோக ரீதியில் கிராமிய மக்கள் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் காண்பிக்கின்ற இணக்கப்பாடு கீழ் மட்டத்தில் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒட்டுமொத்த சனத்தொகையுடன் ஒப்பிடும் போது சங்க அங்கத்துவத்தில் 0.75 சதவீதத்திற்கும் 43 சதவீதத்திற்கும் இடையிலாக காணப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 49 ஆனமையால் கிராமிய மக்கள் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் காண்பிக்கின்ற இணக்கப்பாடு கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (ii) | 2018 ஆம் ஆண்டில் ஒரு சங்கத்திற்கு ரூபா 500,000 வீதம் 07 சங்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,500,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாட்டில் கணக்காய்வு திகதியான 2020 சனவரி 16 ஆந் திகதி வரையில் எந்தவொரு தொகையும் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக தேவையின் அடிப்படையில் சலுகைக் கடன் விகிதத்தின் கீழ் கடன் வழங்குவதற்கு இந்த பணம் ஒதுக்கப்பட்ட போதும் இதுவரை எந்தவொருவரும் கடனுக்காக விண்ணப்பித்திருக்கவில்லை. இந்தப் பணம் சங்கங்களின் மூலம் அரசாங்க வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | இயலுமை அபிவிருத்தி நிதியத்திற்காக (இயலளவு அபிவிருத்தி) ரூபா 300,000 தொகையொன்று சங்கமொன்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 02 கிராம சக்தி சங்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 600,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாட்டில் எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. 07 சங்கங்களின் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியேற்பாட்டில் 01 சதவீதம் முதல் 22 சதவீதத்திற்கு இடையிலாக காணப்பட்டமையால் நிதியேற்பாட்டின் பயன்பாடு நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | இயலளவு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணமும் அந்தந்த சங்கங்களின் காலரீதியான தேவைகள் உருவாகியதன் பின்னர் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | “கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சி வழிகாட்டல்” கைநூலின் இரண்டாவது அத்தியாயத்தின் பிரகாரம் மக்களுக்கான கிராம சக்தி மக்கள் சங்கத்தின் நிறைவேற்று சபைக்கு நிறைவேற்றுவதற்குள்ள பொறுப்புக்களில் அநேகமானவை கைவிடப்பட்டமையால் கிராமிய அபிவிருத்தி பணிகளை செயற்திறனாகவும் தாமதமின்றியும் நிறைவேற்றுவதற்கு சங்கத்தின் நிறைவேற்று சபையின் உதவிக்கு 07 நிரந்தர குழுக்கள் தாபிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தில் 15 சங்கங்களுக்கிடையே 14 சங்கங்கள் இளைஞர்களையும், 10 சங்கங்கள் இயலுமை அபிவிருத்தி மற்றும் தொலைத்தொடர்பு குழுவினாலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது கட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 41 சங்கங்களுக்கிடையில் 08 சங்கங்கள் இயலுமை அபிவிருத்தி மற்றும் தொலைத்தொடர்பு குழுக்களும், 05 சங்கங்களின் இளைஞர் குழுக்களும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் சங்க நியதிகள் மிக சிகக்லாக இருந்ததுடன் சகல சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டு அதனை செயற்படு நிலையில் பேணிச்செல்லல் பிரயோக ரீதியில் பிரச்சினையாக காணப்படுவதாகவும், எனினும் நுவரெலியா மாவட்டத்தில் கிராம சக்தி ஜனதா தொழில்முயற்சி கவனத்தில் கொள்ளக்கூடிய மட்டத்தில் வெற்றிகரமாக அமுல்படுத்தி கட்டியெழுப்பப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சி மற்றும் மகளிர் பங்களிப்புடன் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு நாடுமுழுவதும் 05 - 06 அங்கத்தவர்களுக்கிடையான | எதிர்காலத்தில் கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சிக்குரிய பிரிவுகளுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சகலரையும் அழைத்து இந்த சிறிய குழுக்கள் மற்றும் நடுத்தர குழுக்களை | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய குழுவொன்று தாபிக்கப்பட்டு வறுமையில் வாடும் மக்களை வலுப்பெறச் செய்து தலைமைத்துவத்தை வழங்குவதற்கு இது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். முதலாவது கட்டத்தில் 14 சங்கங்களுக்கிடையில் 05 சங்கங்கள் தாபிக்கப்படாதிருந்ததுடன் இரண்டாவது கட்டத்தில் 41 சங்கங்களுக்கிடையில் 22 சங்கங்கள் சிறிய குழுக்கள் மற்றும் 30 சங்கங்கள் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபிக்கும் வரை செயற்படு நிலையில் காணப்படாத விசேடமாக கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக நேரடியாக பங்களிப்பு காணப்படாத அவ்வாறான சிறு குழுக்கள் மற்றும் நடுத்தர குழுக்கள் தொடர்பாக கண்டறிந்து அவற்றை செயற்படு நிலைக்கு கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகைக்கு உரியதாக பேணிச் செல்லப்பட்டிருந்த பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்ட 45 பொருள் விடயங்களுக்குரிய 129 அலகுகளின் பௌதீக இருப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் இந்த பொருட்கள் கட்டிட சூழலில் பௌதீக ரீதியில் காணப்பட்டமை வெளிப்படுத்தப்படாதிருந்த துடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோட்டை சனாதிபதி மாளிகையில் பௌதீக ரீதியில் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்படாத பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விசாரணையின் பின்னர் வெளிப்படுத்தப்படும் விடயங்களுக்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்படாத கூட்டுமொத்தமாக 15 விடயங்களில் 32 அலகுகள், பொருட் பதிவேட்டு புத்தகத்தின் இலக்கம் மற்றும் பொருட் பதிவேட்டு புத்தகத்தின் பிரகாரமான மீதியுடன் 2019 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | மாளிகையின் பூங்கா பொறுப்பாளரிடம் காணப்பட்ட பொருட்கள் மாளிகையின் பொறுப்பாளரின் பொருட்பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாளிகையின் பொறுப்பாளரின் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் சகல பொருட்களையும் உள்ளடக்கும் வகையில் 2020 இன் பொருள் மெய்மையாய்வின் போது சரிசெய்யப்படும். 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது மெய்மையாய்வுச் சபை உத்தியோகத்தரின் கீழ் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | மாளிகையின் பொறுப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கோட்டை சனாதிபதி மாளிகையின் பொருட் பதிவேட்டு பொருட்களில் 12 விடயங்களில் 24 அலகுகள் மஹகமசேகர மாவத்தை, சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தின் தேவைக்காக விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த பொருட்கள் மஹகமசேகர மாவத்தை, சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்திற்கு விநியோகிக்கும் போது விநியோகித்தல் கட்டளை மூலம் உரிய பொருட் பதவேட்டு புத்தகங்களில் | பின்வரும் பொருட்கள் முன்னாள் சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தமை எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br>Treadmill - 01<br>Weight Scale (electric) - 01<br>AC(18000BTU/43000BTU)- 01<br>ACPanasonic (15000BTU/43000BTU) -01<br>ஏனைய பொருட்கள் கிடைத்திருந்தமையை உறுதிப்படுத்துவதற்காக | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்த துடன் கோட்டை மாளிகையின் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் இது தொடர்பான சீராக்கங்களேனும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | முன்னாள் சனாதிபதி அவர்களின் பிரத்தியேக செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு உரிய உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | சனாதிபதி செயலகத்தின் பதிவேட்டின் பிரகாரம் சனாதிபதி மாளிகையின் பெயரில் விநியோகிக்கப்பட்ட பொருட்கள், பொறுப்பேற்ற உத்தியோகத்தரினால் மாளிகையின் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்படாமல் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | களஞ்சியத்திலிருந்து பொருட்களை கையேற்ற உத்தியோகத்தர் அந்த பொருட்களை உரிய இடத்திற்கு கையளித்தல் தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொண்டு வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (v) | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்தி அதற்குரிய சீராக்கங்கள் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 இன் பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் கோட்டை சனாதிபதி மாளிகையின் பொருட்கள் தொடர்பாக விசேட ஆய்வு சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைக்கு மேலதிகமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினாலும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பொருட் பதிவேட்டின் புத்தகங்களில் குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (vi) | பொருட்கள் விநியோக கட்டளைப் பத்திரம் கணனி மயப்படுத்த முறைமைக்கு | அவசர மற்றும் அத்தியவசிய சந்தர்ப்பங்களின் போது தற்காலிக விநியோகித்தல் | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | புறம்பாக விநியோகிக்கப்பட்டிருந்த துடன் அதன் போது அந்த விநியோகித்தல் கட்டளைப் பத்திரத்தில் உரிய பொருட்களின் வகைகள் மற்றும் கட்டளை பத்திரத்தின் தொடர் இலக்கங்கள் கையினால் எழுதப்பட்டு அல்லது தொடரிலக்கங்கள் இன்றி விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | கட்டளை வழங்குவதற்கு ஏற்பட்டிருந்த போதிலும் பின்னர் அதற்காக முறையான விநியோகித்தல் கட்டளை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. | மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (vii) | அநேக சந்தர்ப்பங்களின் போது சனாதிபதி செயலகத்தின் களஞ்சியத்தில் சனாதிபதி மாளிகைக்காக விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கு உரிய பொருள் விநியோகித்தல் கட்டளை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (பிரதான கணக்காளர்) இனால் அங்கீகரிக்கப்படாதிருந்த துடன் விநியோகிக்கும் உத்தியோகத்தரின் கையொப்பம் மாத்திரம் இடப்பட்டிருந்தது. | பொருள் விநியோகித்தல் கட்டளைக்கு முன்னர் பொருள் விண்ணப்பப் பத்திரம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அங்கீகரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (viii) | சனாதிபதி அலுவலகத்திற்கு வெளியே பொருட்களை விநியோகிக்கும் போது வாயிற் கதவு அனுமதிப்பத்திரம் பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறின்றி கோட்டை சனாதிபதி மாளிகைக்கு பொருட்கள் விநியோகிக்கப் பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | சில சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் சனாதிபதி செயலக வளவில் கொண்டு செல்லப்படாமல் நேரடியாக சனாதிபதி அலுவலக வளவிற்கு வெளியே பொருட்கள் தேவையான இடங்களுக்கு கையளித்தல் மேற்கொள்ளப்படுகின்ற மையால் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது வாயிற் கதவு அனுமதிபத்திரம் பயன்படுத்தப்படுவதில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ix) | பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கு உரிய உத்தியோகத்தரின் பெயர், கையொப்பம் மற்றும் திகதி | களஞ்சியத்திலிருந்து பொருட்கள் விநியோகிக்கும் போது கையேற்ற உத்தியோகத்தரின் பெயர், | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பதவி மற்றும் அடையாள அட்டை இலக்கம் அல்லது சேவை இலக்கம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (x) | பௌதீக பரிசோதனையின் போது இனங்காணப்பட்ட சனாதிபதி மாளிகையில் உள்ள 05 பொருள் விடயங்களில் 59 அலகுகள் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய பொருட்கள் பௌதீக ரீதியில் காணப்படுகின்ற மையால் 2020 இன் பொருள் மெய்மையாய்வின் போது பொருட் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (xi) | நிதிப்பிரமாணம் 753(2) இன் பிரகாரம் பொது 219 பெறுவனவு கட்டளை மூலம் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டு களஞ்சியத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 வரை அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | முன்னைய ஆண்டுகளில் பெறுவனவுக் கட்டளை விநியோகிக்காமை தொடர்பாக அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை அழைத்து ஆரம்ப விசாரணை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (xii) | கோட்டை சனாதிபதி மாளிகையில் தற்போதைய மாளிகை பொறுப்பாளர் 2020 மார்ச் 20 ஆந் திகதி முன்னாள் இருந்த மாளிகை பொறுப்பாளரின் பொருட்களை கையேற்கும் போது 123 பொருள் விடயங்களில் 224 அலகுகள் குறைவாக கையேற்றிருந்தார். அந்த பொருள் பற்றாக்குறை தொடர்பாக முறையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் கையளிக்கும் போது ஏற்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொண்டு வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (xiii) | தற்போதைய மாளிகை பொறுப்பாளரினால் முன்னால் இருந்த மாளிகை பொறுப்பாளரிடமிருந்து பொருள் கையேற்கும் போது பொருட் பதிவேட்டு புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் பௌதீக ரீதியில் பரீட்சித்து அத்திகதியில் காணப்பட்ட உள்ளபடியான மீதி பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயங்களை சரிசெய்வதற்காக பொருள் கையளித்தல்/கையேற்றல் தொடர்பாக முறையான ஆலோசனையை உள்ளடக்கி உள்ளக சுற்றறிக்கையொன்று இதற்காக விநியோகிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (xiv) | முன்னாள் இருந்த மாளிகைப் பொறுப்பாளரால் 2019 நவம்பர் 18 ஆந் திகதி சனாதிபதி மாளிகையின் பொருட்களை கையேற்கும் போது சனாதிபதி சிரேஷ்ட உதவிச் செயலாளர் (உள்ளக நிர்வாகம்) அவரின் தொலைபேசி அறிவித்தலின் பிரகாரம் புதிய கட்டிடத்தில் பொருட் பதிவேடுகளில் 35 வகையான பொருட்களில் 61 அலகுகள் பற்றாக்குறையாக காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறையான பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் ஆரம்ப விசாரணைகள் மேற்கொண்டு வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (xv) | அலுவலகத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட தேசிய பொருளாதார சபை அலுவலகம், அதில் உள்ள அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்களுடன் இளைஞர் விவகார அமைச்சிற்கு முன்னாள் இருந்த நிர்வாக உத்தியோகத்தரை உள்ளடக்கி குழுவொன்றினால் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கையில் உள்ளடக்கிய சந்தர்ப்பத்தின் | ''தேசிய பொருளாதார சபையின்'' அலுவலக வளவில் மற்றும் அதன் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் 2019.12.17 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த மைக்கான எழுத்து மூல சான்றுகளும் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கை தேசிய பொருளாதார சபையை | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது சனாதிபதி அலுவலகத்தினால் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 16,868,576 தொகையான வைப்புப் பணம் தற்போது உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தமையால் மீண்டும் சனாதிபதி அலுவலகத்திற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபிக்கும் வகையில் சனாதிபதி அலுவலகத்துடன் Overseas Reality (Ceylon) Plc உடன் ஆரம்ப உடன்படிக்கையில் உள்ளடக்குகின்ற சந்தர்ப்பத்தின் போது சனாதிபதி அலுவலகத்தினால் கம்பனிக்கு செலுத்தப்பட்ட வைப்பு பணம் தற்போது உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்தமையினால் மீண்டும் திறைசேரிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (xvi) | விசேட ஊடக அலகுகளை உள்ளடக்கிய ஊடக பிரிவின் பொருட்களில் அநேகமானவை முன்னாள் ஊடக பிரிவில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரினால் முன்னாள் சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு கையளிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்ட போதிலும் முறையான பொருள் மெய்மையாய்வின் ஊடாக இந்த பொருட்களின் இருப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 இன் பொருள் மெய்மையாய்விற்கு ஒத்ததாக சனாதிபதி ஊடகப் பிரவில் பொருட்களை இனங்காண்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் முன்னாள் சனாதிபதி அவர்களின் பிரத்தியேக செயலாளரிடம் உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (xvii) | சனாதிபதி செயலாளரின் பேரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பௌதீக இருப்பு / உரித்து உறுதிப்படுத்தப்படாத 50 வாகனங்கள் தொடர்பாக பரீட்சித்து சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மோட்டார் வாகன | 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகன மெய்மையாய்வின் மூலம் 14 வாகனங்கள் பௌதீக ரீதியில் காணப்படுகின்ற இடங்கள் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு முடியுமாக இருந்ததுடன் தற்போது அந்த வாகனங்களின் பதிவு உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே தகவல்களை கண்டறிவதற்கு | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக பேணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சனாதிபதி செயலகம் மற்றும் சனாதிபதி மாளிகை மற்றும் சனாதிபதி பாதுகாப்பு பிரிவுகளின் முகவரியின் கீழ், ஏனைய நபர்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்கள் 53 ஆக இருந்ததுடன் அந்த வாகனங்களை சனாதிபதி செயலகம் மற்றும் அதனுடன் அண்மித்த பிரிவுகளின் முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கோ அல்லது அந்த முகவரியை பயன்படுத்துவதற்கான காரணமோ கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முடியாத 38 வாகனங்கள் தொடர்பாக சரியாக தகவல்கள் இலங்கை பொலிசிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (viii) | சனாதிபதி செயலகத்திற்குரிய 69 வாகனங்கள் 2016 ஆம் ஆண்டின்போது இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களுக்கிடையே 06 வாகனங்கள் தொடர்ந்தும் சனாதிபதி செயலாளரின் பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சனாதிபதி செயலகத்திற்குரிய சனாதிபதி செயலாளரின் பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 47 வாகனங்கள் பல்வேறு நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அந்த வாகனங்களை மீண்டும் கையேற்பதற்கோ அல்லது அதற்குரிய முறையான மிகுதி நடவடிக்கைகளை | சனாதிபதி செயலகத்தினால் இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களுக்கிடையே இதுவரை கையேற்கப்படாத 06 வாகனங்களை கையேற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கிடையே 27 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் தற்போது பெறப்பட்டு உரிய கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய 20 வாகனங்கள் தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அவ்வாறே பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உரிய கையளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (xix) | திறைசேரி கணனி அறிக்கையின் பிரகாரம் நடைமுறை வேலையின் கீழ் சனாதிபதி அலுவலகத்திற்குரிய ரூபா 80,437,366.66 காண்பிக்கப்பட்ட போதிலும் சனாதிபதி அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களில் அது கட்டிடங்கள் மற்றும் நிர்மாணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அறிக்கையின் பிரகாரம் நடைமுறை வேலையின் கீழ் சனாதிபதி அலுவலகத்திற்குரிய ரூபா 80,437,366.66 தொகை கட்டிடங்கள் மற்றும் நிர்மாணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளமை அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் வகைப்படுத்தல் இலக்கம் (61114) ஒதுக்கீட்டுக் கணக்கின் மாதிரிப் படிவத்தில் உள்ளடக்கப்படாமல் இருந்தமையினால் ஆகும். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.3 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஊடக பிரிவு பிரதான 04 அலகுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த துடன் 2019 நவம்பர் மாதத்தில் புதிய பதவியணியினர் ஊடக பிரிவை கையேற்கும் போது ‘‘புதிய ஊடகப் பிரிவு’’ தவிர ஏனைய எந்தவொரு பிரிவினதும் பொருட்கள் முறையான பிரகாரம் கையேற்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் புதிய பதவியணியினர் பொருட்களை கையேற்ற சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட உள்ளபடியான மீதி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், 2020 சனவரி 06 | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அதன் செயற்பாடு நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் செயற்பாடற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதிய PMD/ENG/INV/20/01 ஆம் இலக்க சனாதிபதி ஊடகப் பிரிவின் பொறியியலாளரால் சனாதிபதி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட “ஊடகப் பிரிவுக்குச் சொந்தமானதாக காணப்பட்டு தொலைந்து போயிருந்த உபகரணங்களின் அண்ணளவான பெறுமதி’ இந்த அறிக்கையின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 34,189,688 அளவாக இருந்ததுடன் அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | அந்த தொலைந்து போன பொருட்களில் உள்ளடங்கியுள்ள 2015 ஆம் ஆண்டு முதல் 2020 சனவரி மாதம் வரை ஊடகப் பிரிவிற்கு ரூபா 17,786,325 பெறுமதியுடைய 104 மடிக் கணனிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் கணக்காய்வுத் திகதி வரையிலும் 26 மடிக் கணனிகள் (LAPTOP) மற்றும் Mac Book Air வகையின் 02 கணனிகள் மாத்திரம் மீண்டும் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அவற்றின் செயற்படு நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் செயற்படாற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (iii) | அவ்வாறே அதில் 2015 ஆம் ஆண்டு முதல் 2020 சனவரி மாதம் வரை வழங்கப்பட்டுள்ள ரூபா 10,380,423 பெறுமதியான 52 DESKTOP கணனிகளில் 04 கணனிகள் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்த துடன் 02 கணனிகள் மீண்டும் பயன்படுத்த | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அவற்றின் செயற்படு நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது. அவ்வாறு கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அநேகமான Desktop கணினிகள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் செயற்படாற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (iv) | அந்த தொலைந்து போன சொத்துக்களில் 2015 ஆம் ஆண்டு முதல் 2020 சனவரி மாதம் வரை ஊடகப் பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 3,470,742 பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 45 I PAD ஆக இருந்ததுடன் அதில் 14 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 03 I PAD மீள அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்ட போதிலும் அதில் 09 கையடக்கத் தொலைபேசிகள் செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் கையளிக்கப்பட்ட 02 I PAD கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | 2020 இன் பொருள் மெய்மையாய்வுக்கு ஒப்பாக சனாதிபதி ஊடகப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் அதன் செயற்படு நிலை தொடர்பாக ஒட்டுமொத்த மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் செயற்பாடற்ற பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 17/1591/791/025 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் “இலங்கை தேசிய | இலங்கை பொருளாதார சபை தாபிக்கப்பட்டதன் நோக்கம் / இலக்குகளை அடைந்து கொள்ளல் என்பவற்றின் | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் / இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய |

பொருளாதார சபை" ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் அதில் 6 பணிகள் காணப்பட்டன. சபை தாபிக்கப்பட்டதன் பின்னர் அதன் நோக்கங்கள் / இலக்குகளை அடைந்து கொள்ளல் தொடர்பாக தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் அந்த திட்டங்களை அடைந்து கொள்ளலின் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்வினால் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும் சபையின் பொது செயலாளர் 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் வெளிநாட்டு விடுமுறை பெற்று அமெரிக்கா நோக்கி சென்றிருந்தமையினால் அந்த விடுமுறை இரண்டு சந்தர்ப்பங்களின் போது 2019 ஒக்தோபர் 18 வரை நீடித்து தருமாறு கோரப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் வெளிநாட்டு விடுமுறை பெற்றிருந்தமையினால் சபையில் ஆக்கபூர்வமான சேவையொன்று மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொருளாதார சபையின் காலத்தை முடிவுறுத்துவதற்கும், பதவிகளை கலைப்பதற்கும் 2019 ஒக்தோபர் 09 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த பொருளதார சபைக்காக 2017 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் மாதம் வரை 29 மாத காலத்தில் ரூபா 237,784,472 தொகை செலவிடப்பட்டிருந்தது.

செயல்முன்னேற்றம் தொடர்பான கோவைகள் கணக்காய்வு தேவைக்காக வழங்குவதற்கு முடியும்.

வகையில் அரசாங்கத்தின் நிதியினை முகாமைத்துவம் செய்தல் வேண்டும்.

**3.5 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு திகதி வரையிலும் சனாதிபதி அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த களஞ்சிய முகாமைத்துவ மென்பொருள் முறைமை 2013 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 1.6 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் களஞ்சியப் பிரிவினால் அந்த முறைமையை அபிவிருத்தி செய்யும் முன்மொழிவு 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அவ்வவ்போது கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சனாதிபதி செயலகத்தின் களஞ்சிய முகாமைத்துவ முறைமை தற்போது சரியான செயற்படு நிலையில் காணப்படுகின்றது. முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக இனங்காணப்பட்ட சில பணிகளுக்கான முன்மொழிவுகள் மாத்திரம் அவ்வவ்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முறைமையை நாளதுவரை யாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |